காலை முரசு
பக்கங்கள்:-29
முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 05 | ஞாயிற்றுக்கிழமை | 21.07.2024 | அதிர்வு 355

## கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்பு!

வத்தளை – எலகந்த பகுதியில் அமைந்துள்ள கால்வாயில் ஒன்றிலிருந்து நேற்றுக் காலை கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எலகந்த பகுதியில் 06



# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதே சிறந்தது

## விக்கி மீண்டும் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது சிறந்த விடயமாகும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் தெரிவித்தார். 06

## தம்பலகாமம் வயல் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் மீட்பு!



திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டாம்புளி எனும் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது .

திருகோணமலை, அன்புவழிபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயசீலன் (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுளார் என்று தம்பலகாமம் பொலிஸார் 06




பொதுவாகவே பாதிப்புற்றோருக்கு, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கு நிவாரணம் வழங்கல், மானியம் அளித்தல், உதவி வழங்கல் என்றாலே முதலில் திட்டும் ஏய்ச்சும் வேண்டுபவர்கள் கிராம சேவையாளர்கள்தான். அது வழமைதான்.

அதற்காக அவர்கள் நூறு வீதம் சரியாகவே நடக்கின்றனரா என்றால் அதுவும் கிடையாது. அந்த வகையில் ஒரு விவகாரம் இது.

இம்முறை நாடு முழுவதும் ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ், மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவிற்கும் குறைந்த 06











# கருணா அம்மான் குழுவினரை வளைத்தெடுத்தது ரணில் அணி

## ஐ.தே.கவின் தலைமையகத்தில் விசேட சந்திப்பு

(பழுவூரான்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமாகிய ஶ்ரீகொத்தாவிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் தலைமையிலான குழுவினர் ஸ்ரீகொத்தாவுக்குச் சென்று ஐ.தே.கவின் உயர்மட்டக் குழுவுடன் விசேட சந்திப்பை மேற்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என்று கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் உப தலைவர் ஜெய சரவணா, செயலாளர் செந்தூரன் தெய்வநாயகம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது விசேடமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், பல இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு கலந்துரையாடல் நிறைவு பெற்றது.

முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையிலான ஐ.தே.கவின் உயர்மட்டக் குழுவினர் இந்த விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.


















# முன்னாள் எம்.பி. சிவசிதம்பரத்தின் ஜனன தின நிகழ்வு

தமிழ்த்தலைவர்களில் ஒருவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் "உடுப்பிட்டிச் சிங்கம்" அமரர் மு.சிவசிதம்பரத்தின் 101 ஆவது ஜனன தின நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். வடமராட்சி, நெல்லியடி பஸ் நிலையச் சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலை வளாகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அரசியல் பிரமுகர்கள், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மலர்மாலை சூடி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.
















# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தியிருந்தால் இலங்கையின் தலைவிதி மோசமாகியிருக்குமாம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை விட்டுவிட்டு, அன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பணத்தை செலவிட்டிருந்தால், இன்று நாடு மிக மோசமான அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும். நிதி ஒதுக்கீட்டின்போது, அன்று தேர்தலை விட பல்வேறு விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் நாட்டை பொறுப்பேற்ற போது நாடு பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. பொருளாதார வீழ்ச்சி மட்டுமன்றி, சட்டமும் அரசியலும் வீழ்ச்சி கண்டன. ஆனால் இந்தத் தேர்தலில் கட்சிகள் தோல்வி அடைந்துள்ளன.

பிரதமர் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, அச்சமின்றி ஏற்றுக்கொண்டேன். ஆனால் அதற்கு முன்னதாகவே எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிற கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டனர்.

அப்போது அவர்கள் யாரும் சவாலை ஏற்க முன்வரவில்லை. ஆனால் நான் சவாலை ஏற்றுக்கொண்டதன் பின்னர், நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தேன்.

அதன் பிரகாரம், முதலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளருடன் கலந்துரையாடுவதற்குத் தயாரானோம். ஆனால் அக்கட்சியின் தவிசாளர் அதனை ஏற்கவில்லை. அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாப்பட்டது. அப்போது அவர் கட்சியினருடன் கலந்து பேசி முடிவை அறியத்தருவதாக சொன்னார். அதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எனக்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

அன்றைய தினம் நான் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவைப் பெற முயற்சித்தேன். ஆனால் அப்போது அதன்

தொடர்ச்சி▼















# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தியிருந்தால் இலங்கையின் தலைவிதி மோசமாகியிருக்குமாம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

தலைவர் சஜித் பிரேமதாஸ தானும் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தார்.

எது எப்படியோ, இறுதியில் அந்த வாக்கெடுப்பில் அவர் போட்டியிடாமல், டலஸ் அழகப்பெருமவை போட்டியிட வைத்தார். எவ்வாறேனும், அந்த நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குழுவொன்று எனக்கு வாக்களித்தது. அதே போன்று, தமிழ் கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடினேன். அவர்களின் ஆதரவையும் நான் பெற்றேன்.

அதன்படி, நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதாரம் முற்றிலுமாக சரிந்துவிட்டது. கீழ்மட்ட நிர்வாகப் பொறிமுறையும் அரசியல் பொறிமுறையும் தகர்ந்து போயின.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் வீடுகளை தீயிட்டுக் கொளுத்தி, அவர்கள் வீதிக்கு வராமல் மிரட்டும் சூழல் எங்கும் காணப்பட்டது. பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வீதியில் இறங்கக்கூடிய சூழல் இருக்கவில்லை.

இந்நிலை மேலும் நீடித்திருந்தால் கிராமத்தின் ஆட்சியை கலகக்காரர்கள் கைப்பற்றி இருப்பார்கள். கீழ்மட்ட அளவில் அதிகாரத்தைக் கைப்பற்றவே அவர்கள் முயன்றனர். இந்த சவால்களை முறியடித்து நாட்டை படிப்படியாக முன்னேற்றுவதற்கு என்னால் முடிந்தது. இந்தப் பயணத்தின் போது எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. இந்தப் பின்னணியில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வந்தது. ஆனால் அதற்குப் பணம் ஒதுக்கும் திராணி இருக்கவில்லை. அந்தத் தேர்தலுக்குப் பணம் ஒதுக்குவதைவிட, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் அன்று இருந்தன. மருந்து, எரிபொருள் ஆகியவற்றை இறக்குமதி செய்யப் பணம் செலவிட வேண்டியிருந்தது.

அதன்போது, அன்று இருந்த தேர்தல்கள் ஆணைக்குழு, உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்காமல் சாலிய பீரிஸிடம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டது. அது தவறான செயல் என்பதைக் கூற வேண்டும். எப்படியோ பின்னர் அதன் உறுப்பினர்கள் இராஜினாமா செய்தனர். புதிய குழு நியமிக்கப்பட்டது. அந்த நேரத்திலும் நான் உண்மையைக் கூறினேன். உள்ளூராட்சி மன்றத்த் தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் பணமில்லை என்பதை மீண்டும் தெரிவித்தேன்.

நான் அவ்வாறு செயற்படாமல், பொருளாதார அபிவிருத்தியை ஒதுக்கிவிட்டு தேர்தலை நடத்தி இருந்தால், இன்று இந்த நாட்டுக்கு ஏற்படும் அவல நிலையை நான் கூற வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் நாடு அன்று இருந்த நிலையிலிருந்து மீள முடிந்திருக்குமா?

அஸ்வெசுமவிற்கு, சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு பணம் ஒதுக்க முடியுமா? ‘உறுமய’ காணி உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த முடியுமா? அப்படி நடந்திருந்தால் எங்களால் இவை ஒன்றையும் செய்திருக்க முடியாது.

எவ்வாறாயினும், இந்த சவால்களை வெற்றிகொண்டு நாட்டின் பொருளாதாரத்தை வலுவான அடித்தளத்தில் முன்னோக்கி கொண்டு வந்துள்ளோம். அதனால்தான் இன்று மக்கள் கையில் பணம் இருக்கிறது. இந்நாட்டில் அவதியுறும் சாதாரண மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க விரும்பினேன்.

அதன்படி, அவர்களுக்கு அஸ்வெசும வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. தலா பத்து கிலோ அரிசி வழங்கப்பட்டது. ‘உறுமய’ திட்டத்தின் கீழ் முழு உரிமையுள்ள காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்படுகிறது. மேலும் விவசாய நவீனமயமாக்கல் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் மூலம், கீழ் மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்குவதற்கு எம்மால் முடிந்தது. இந்த நடவடிக்கைகளால் மக்கள் இன்று நிம்மதி அடைந்துள்ளனர்.” – என்றார்.









# 2 மீன்பிடிப் படகுகள் ஆறு பேருடன் மாயம்

கடற்றொழில் நடவடிக்கைகளுக்காகச் சென்ற இரண்டு மீன்பிடிப் படகுகள் 6 பேருடன் காணாமல்போயுள்ளன என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகங்களிலிருந்து புறப்பட்டுச் சென்ற படகுகளே காணாமல்போயுள்ளன என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யாழ். பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட நெடுநாள் மீன்பிடி படகில் 4 மீனவர்களும், அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட படகில் இரண்டு மீனவர்களும் பயணித்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல்போயுள்ள மீனவர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்தநிலையில், மேற்படி மீனவர்களைத் தேடும் பணிகளைக் கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் கல்வி நிலையில் சிறந்து விளங்கும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு மாதாந்தம் பணக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இதில் வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்து மட்டும் 7 ஆயிரம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 2,540 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு தேர்வான மாணவர்களை பாடசாலை ஆசிரியர்கள் படிவத்தை நிரப்பி வழங்கி, கிராம சேவையாளரின் சிபார்சுடன் கல்வித் திணைக்களம் ஊடாகவே ஜனாதிபதி செயலகத்துக்கு அவற்றை அனுப்பி வைத்தனர். ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அனுமதிக்கப்பட்ட பட்டியல் மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதில் தேர்வாகும் மாணவர்களில் க.பொ.த சாதாரண தரத்திற்கு கீழ்ப்பட்ட மாணவர்களிற்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபாவும் உயர்தர மாணவர்களிற்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதில் தற்போது எழுந்துள்ள சர்ச்சை என்னவென்றால் வறுமைக் கோட்டின் கீழ் வாடும் பல்லாயிரம் மாணவர்கள் இதில் உள் வாங்கப்படவேயில்லை. அரச உத்தியோகத்தர்கள், பெரும் வர்த்தகர்கள், மதுபானச்சாலை ஒன்றின் உரிமையாளரது பிள்ளை என வசதி படைத்த பலரதும் பிள்ளைகள் உள்வாங்கப்பட்டுள்ளமை கண்டு தற்போது பெரும் அதிர்ச்சி வெளியிடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற புலமைப்பரிசில் வழங்கல் ஆரம்ப நிகழ்வின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரியாத்தனமாக ஓர் மாணவியிடம் உங்கள் தந்தை என்ன வேலை எனக் கேட்டுள்ளார். அதன்போது அந்த மாணவி தந்தையார் பொறியியலாளர் என மேடையில் கூறியபோதே ஓர் சலசலப்பு ஏறபட்டது.

இருப்பினும் இந்த விவகாரம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை...!

## ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதால் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நாளை (இன்று) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியத்தில் எம்முடன் இணைந்து செயற்படக் கூடியவறான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். அவருடன் சிறப்பு விருந்தினராக அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளார்.

எமது கட்சியின் மாநாட்டுக்கு அனைத்துத் தரப்பினரையும் வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.

எங்களுடைய கட்சி இதுவரை பல கஷ்டங்களை எதிர்கொண்டு, தற்போது நல்லதொரு நிலைக்கு வந்துள்ளது. எமது கட்சியைப் பதிவு செய்ய விடக் கூடாது என்று கூட பலர் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அது கூட எமக்குச் சில காலங்களுக்கு முன்னரே தெரியவந்துள்ளது.

எமதுகட்சி இன்றுபதிவுசெய்யப்பட்டபல இளைஞர்களைத் தன்னகத்தே கொண்ட கட்சியாகக் காணப்படுகின்றது.

நாங்கள் இதுவரையில் என்ன செய்தோம் எனக் கேட்கக் கூடும். பல நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினர்களுடன் எமது பிரச்சினைகள் தொடர்பில் பேசி இருக்கின்றோம். எமது கருத்துக்களை அவர்கள் உன்னிப்பாகச் செவிமடுத்து சிலதைச் செய்துள்ளார்கள்.

இன்று உலக நாடுகள் மத்தியில் இலங்கைக்கான ஆதரவு குறைந்துள்ளது. பல நாடுகள் இலங்கைக்கான தமது ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளனர்

தமிழர்களின் நிலங்களைத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு தொடர்பில் பல தரப்பிடமும் எடுத்துக் கூறி வெளிக்கொணர்ந்துள்ளோம்.

அதுமட்டுமின்றி எங்களுடைய பிரச்சினைகளைப் பற்றி சிங்களத்தில் பல விடயங்களைக் கூறி வருகின்றோம். சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து சிங்கள மொழியில் எடுத்துக் கூறியுள்ளோம். இன்னமும் கூறி வருகின்றோம்.

எமது கட்சி இளையோரின் கட்சியாகும். அப்ப நீங்கள் ஏன் தலைவராக இருக்கின்றீர்கள் எனக் கேட்கலாம். குழந்தையைத் தாய் ஒருவர் பிரசவிப்பதற்கு முன்னர் அந்தக் குழந்தை ஆரோக்கியமானதாகப் பிறக்க வேண்டும் என்பதற்காகச் செவிலி தாய் ஒருவர் கூட இருந்து அந்தத் தாயைப் பார்த்துக்கொள்வார்.

அதேபோலவே இந்தக் கட்சியை நல்ல நிலையில்வளர்த்து, இளையோரிடம்கையளித்து விட்டு சம்பந்தன் போல் போய் சேர்ந்து விடுவேன்." – என்றார்.

## கை, கால்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அமைந்துள்ள கால்வாயில் சடலம் ஒன்று காணப்படுகின்றது எனப் பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வத்தளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## தம்பலகாமம் வயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தெரிவித்தனர்.

விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்ற வேளையில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டதையடுத்து தம்பலகாமம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார். இதையடுத்து அவ்விடத்துக்கு வந்த தம்பலகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
தென்றல் FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசியல் மூடத்தனம்

அரசியலில் கிடைக்கும் சந்தர்ப்பங்களை - வாய்ப்புக்களை - சரிவர, சமயோசிதமாக பயன்படுத்துவதில்தான் வெற்றி தங்கி இருக்கின்றது.

கிட்டும் சந்தர்ப்பத்தைக் கோட்டை விடுபவன் அரசியலில் கடைசியில் தோற்றுப் போகின்றான்.

வாய்ப்புக்களைப் புரிந்து கொள்ளாமல், சமய சந்தர்ப்பத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், கொள்கைக் கோட்பாடுகள் பேசி, அருமந்த வாய்ப்பைப் போட்டடிப்பவர்கள் சரித்திரத்தில் தோற்றுக் காணாமல் போனவர்களாகி விடுகின்றனர்.

அப்படி ஒரு பிரகிருதிகள் குழு தமிழினத்தின் இறுதி வாய்ப்பைப் போட்டடித்துக் குழப்புவதற்குக் கங்கணம் கட்டிக் களத்தில் இறங்கியிருக்கின்றமை தமிழினத்தின் துர்லபமின்றி வேறில்லை.

நடந்துமுடிந்தஎட்டுஜனாதிபதித்தேர்தல்களினின்றும் இப்போது நடக்கப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது. சிறுபான்மை இன மக்களுக்கு அது தரப்போகும் அமோக வாய்ப்பு ஒன்றை அரசியலில் கற்றறிந்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் 'அரசியல்மூடர்கள்' போட்டடித்து மண்ணாக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றமை தமிழினத்தின் துரதிர்ஷ்டம்.

வழமையாக இதுவரை நடந்த ஜனாதிபதிகள் தேர்தல்கள் எல்லாம் நேரடியாக தென்னிலங்கையின் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு இடையில் நடந்தவை. அதனால் சிறுபான்மையினரின் பங்களிப்பு காத்திரமான தாக்கத்தை அவற்றில் நேரடியாகச் செலுத்தவில்லை.

அதனால் அவை எவற்றிலும் இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையும் இடம் பெறவில்லை. அது மட்டுமல்ல, சிறுபான்மையினரின் முக்கியத்துவம் பிரதான இடம் பெறாமையால்அவற்றில்எல்லாம்பெரும்பாலும் பேரினவாதம் மிதப்பெடுத்து ஓடியதும் கண் கூடு.

ஆனால் இம்முறை தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது. சிறுபான்மை இனத்தவருக்கே பிரதான பங்களிப்பு வழங்கும் விடயமாக அது நேரத்துடனேயே திரும்பி விட்டது.

வழமையான இருமுனைப் போட்டியைத் தாண்டி, மூன்று அல்லது நான்கு முனை போட்டியாக இந்தத் தேர்தல்மாறி இருப்பது வெளிப்படையானது.

மூன்று அல்லது நான்கு முனை போட்டி என்பதற்கு அப்பால், எந்த வேட்பாளரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளை எடுப்பதற்கான சாத்தியம் அடியோடு இல்லை என்பதும் முற்கூட்டியே உறுதியாகி விட்டது. இதனால, இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையும் - வாக்காளர்களின், குறிப்பாக சிறுபான்மையினரின், அடுத்த விருப்பு வாக்குத்தெரிவும் முக்கிய இடம்பிடிக்கும் சூழ்நிலை இம்முறை விசேடமாக உருவாகியுள்ளது.

சிறுபான்மையினரின் வாக்குகளே வெற்றியாளரைத் தீர்மானிக்கும் என்ற நிலைப்பாடு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரேதிட்டவட்டமாகவும்தெளிவாகவும் வெளிப்பட்டிருக்கின்றமையால், தென்னிலங்கை தரப்புகளும் தலைவர்களும் சிறுபான்மை மக்களைத் தேடி வரும் சூழலும் உருவாகி இருக்கின்றது. வழக்கமாக இத்தகைய தேர்தல்களில் அலைமோதும் பேரினவாதம் இம்முறை அடியோடு அடங்கி ஒதுக்கப்பட்டு விட்டது.

இதுதான், சிறுபான்மையினருக்கு - குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு - தங்களது நீதியான அபிலாசைகளை, எதிர்பார்ப்புகளை, அவாவை நிபந்தனைகளாக தென்னிலங்கைத் தலைவர்கள் முன்வைத்துப் பேரம் பேசிக் காய் நகர்த்துவதற்கு கிடைத்திருக்கும் அபூர்வமான - அதிசயமான - சந்தர்ப்பமாகும்.

வரலாறு நமக்கு முன் படைக்கும் அரிய வாய்ப்பு இது.

இந்தச் சந்தர்ப்பத்தை பொது வேட்பாளர் என்ற குருட்டாம்போக்கு கொள்கையில் குழப்பியடித்து நாசமாக்க ஒரு தரப்பு புறப்பட்டிருக்கின்றது. தாங்கள் மூளையால் - அறிவு ரீதியாக - சிந்திப்பதை விட, உணர்வு ரீதியாக செயல்படுகின்றோம் என்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தோடு, இனத்துக்கு கிடைத்த இந்த அருமையான வாய்ப்பை மண்ணாக்க அத்தரப்புகள் களம் இறங்கி இருக்கின்றமை சந்தி சிரிக்கும் விடயம்.

இனத்தின் இருப்புக்கான நடவடிக்கை என்ற பெயரில் அத்தரப்புகள் முன்னெடுக்கும் இந்நகர்வு தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்டு, அவற்றின் இருப்பிற்கே ஆபத்தாகத்தான் முடியும் என்றே தோன்றுகின்றது.

# தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி விரைவில் அறிமுகம்

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி கொடி விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் விஜய் கடந்த பிப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கி, டில்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்திலும் பதிவு செய்தார். 2026 சட்டப் பேரவை தேர்தல்தான் இலக்கு என்றும் அறிவித்தார். 2 கோடி உறுப்பினர் சேர்க்கைக்கான பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இதற்கிடையே, 'தி கோட்' என்ற படத்தில் விஜய் தற்போது நடித்து வருகிறார். செப்டம்பரில் இந்தப் படம் திரைக்கு வர உள்ளது. படத்தில் அவரது பணிகள் முடிந்து விட்டதாக கூறப்படும் நிலையில், கட்சி பணிகளில் அவர் தீவிரம் காட்டி வருகிறார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு மற்றும் கட்சி கொடி அறிமுகம் செய்வது குறித்து, கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்துடன் விஜய் அவ்வப்போது ஆலோசனை நடத்தி வருகிறார். அந்த வகையில், 'தி கோட்' பட வெளியீட்டுக்கு பிறகு மாநாட்டை நடத்த விஜய் திட்டமிட்டுள்ளார் என கட்சி நிர்வாகிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், மாநாட்டுக்கு முன்பாக, கட்சியின் கொடியை விஜய் அறிமுகம் செய்ய இருக்கின்றார் என தகவல் வெளியாகியுள்ளது.



கடந்த 2009 ஆம் ஆண்டு விஜய் தனது ரசிகர் மன்றத்தை மக்கள் இயக்கமாக மாற்றி, இயக்கத்தின் கொடியை ஜூலை 26 ஆம் திகதி அறிமுகம் செய்தார்.

அதேபோல, தமிழக வெற்றிக் கழகம் கட்சி கொடியையும் ஜூலை 26 ஆம் திகதி அறிமுகம் செய்ய விஜய் திட்டமிட்டுள்ளார் என நிர்வாகிகள் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனாலும், இதுதொடர்பாக அதிகாரப்பூர்வ தகவல் தெரிவிக்கப்படவில்லை.

# கட்சியில் எந்த பொறுப்பு வந்தாலும் இளைஞரணியை மறக்க மாட்டேன்

## உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு




"எல்லா அமைச்சர்களும் முதல்வருக்கு துணை தான். எந்தப் பொறுப்பு வந்தாலும் இளைஞரணியை மறக்க மாட்டேன்."

– இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞரணியின் 45 ஆம் ஆண்டு தொடக்க விழா சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க. இளைஞரணி தலைமைச் செயலகமான அன்பகத்தில் நேற்று நடைபெற்றது.

இதற்கு மாநில இளைஞரணி செயலாளரும், விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்தார்.

இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வருவாய் மாவட்ட வாரியாக சமூக வலைதளப் பக்கத்தையும், மாவட்ட, மண்டல அமைப்புச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான சமூக வலைதளப் பயிற்சியையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த பயிற்சியை 7 தொழில்நுட்ப வல்லுநர்கள் வழங்கினர்.

பின்னர் அமைப்பு நிர்வாகிகளுடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகைப்படம் எடுத்துக்கொண்டார். விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"மக்களவைத் தேர்தல், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஈடுபட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றி. பிரதமர் மோடி 6 முறை அல்ல ஆயிரம் முறை தமிழகத்துக்கு வந்தாலும் மக்களவை தேர்தலில் வெற்றிபெற முடியாது என்று கூறினேன். அதேபோல தமிழக மக்கள் மக்களவை தேர்தலில் நிரூபித்தனர். இதற்கு முக்கிய பங்காற்றிய இளைஞரணி நிர்வாகிகள், செயலாளர்களுக்கு எனது நன்றி.

இன்றைய காலகட்டத்தில் சமூக வலைதளங்கள் மிகவும் முக்கியம். எல்லா அமைச்சர்களும் முதல்வருக்கு துணையாக தான் இருப்போம். எந்தப் பொறுப்பு வந்தாலும் இளைஞரணியை மறக்க மாட்டேன். இளைஞரணி செயலாளர் பதவி எனது மனதுக்கு மிகவும் நெருக்கமானது," – என்றார்.

உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி அளிக்கப்பட இருப்பதாக செய்திகள் வரும் நிலையில் அவர் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# வடக்கு ஹைட்டியில் புலம்பெயர் குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகு தீப்பிடித்ததில் 40 பேர் உயிரிழப்பு

வடக்கு ஹைட்டியில் புலம்பெயர்ந்த குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகு திடீரென தீப்பிடித்ததில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

80 இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தவர்களை ஏற்றிக் கொண்டு டர்க்ஸ் மற்றும் கெய்கோஸ் தீவுகளுக்கு படகு ஒன்று கடந்த புதன்கிழமை புறப்பட்டதாக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு கூறியதாக ஐ.நா பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியிருந்த 41 புலம்பெயர்ந்தோர் ஹைட்டியின் கடலோர காவல்படையினரால் மீட்கப்பட்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. 11 புலம்பெயர்ந்தோர் தீக்காயங்களுக்கு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தீ விபத்திற்கான காரணம் குறித்து உடனடித் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

வறுமையில் வாடும் கரீபியன் நாட்டிலிருந்து இடம்பெயர்வது பல மாதங்களாக அதிகரித்து வருகிறது. இப்போது பரந்த நிலப்பரப்பைக் கட்டுப்படுத்தும் குற்றவாளி கும்பல்களின் வன்முறையில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தப்பி ஓடுகிறார்கள்.

ஹைட்டியின் சமூகப் பொருளாதார நிலைமை வேதனையில் உள்ளது என்று அந்த நாட்டில் உள்ள ஐ.நாவின் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் தலைமை அதிகாரி கிரிகோயர் குட்ஸ்டீன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதங்களில் ஏற்பட்ட தீவிர வன்முறை ஹைட்டியர்களை இன்னும் அவநம்பிக்கையான நடவடிக்கைகளை நாடியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் பாலம் இடிந்து விழுந்தது; 11 பேர் உயிரிழப்பு, பலர் மாயம்



வடமேற்கு சீனாவின் ஷான்சி மாகாணத்தில் நெடுஞ்சாலை பாலம் ஒன்று இடிந்து விழுந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன நேரப்படி நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துள்ளனர் என சீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் பெய்த கடுமையான மழை மற்றும் திடீர் வெள்ளம் காரணமாக பாலம் இடிந்து விழுந்துள்ளது என கூறப்படுகிறது.

மீட்புக் குழுவினர் தலையிட்டு பாலம் இடிந்து விழுந்த பகுதியில் 05 வாகனங்கள் ஆற்றில் விழுந்து கிடந்ததை கண்டு அவற்றை மீட்டுள்ளனர்.

இந்த விபத்தில் 30 பேரை காணவில்லை, அவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த சம்பவத்தை அடுத்து சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முழு மீட்புப் பணிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.




# பங்களாதேஷில் உள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை காரணமாக அந்த நாட்டில் உள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

50 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் பங்களாதேஷின் 3 பல்கலைக்கழகங்களில் கல்விகற்கின்றனர் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் தொடர்புகொண்டு தேவையான அறிவுறுத்தல்களை வழங்க இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் தொடர்பில் அவர்கள் கற்கும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பங்களாதேஷில் நிலவும் குழப்ப நிலைமை காரணமாக இதுவரையில் இலங்கை மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த மாணவர்கள் நாடு திரும்ப விரும்பினால், அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பங்களாதேஷில் கடந்த 20 நாள்களாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அமைதியின்மையினால் 110 பேர் உயிரிழந்துள்ளனர்.

நிலைமை தொடர்ந்தும் மோசமடைந்துள்ளதால் பங்களாதேஷ் முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவின் முந்திரா துறைமுகத்தில் இருந்து இலங்கை நோக்கி பயணித்த கப்பலில் தீ பரவல்

இந்தியாவின் முந்திரா துறைமுகத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பொருள்கள் போக்குவரத்து கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் கோவாவில் இருந்து 102 கடல் மைல் தொலைவில் தென் மேற்கு திசையிலுள்ள இந்து சமுத்திரத்தில் கப்பல் தீ விபத்திற்குள்ளாகியுள்ளதாக என்.டி.ரி.வி. செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

தீப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய கரையோர பாதுகாப்பு படையினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக, விமானம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.





# 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி பதவிக்காலம் குறித்த ஜனாதிபதியின் உரைக்கு ஜயம்பதி விக்கிரமரத்ன பதில்

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் அதிகூடிய பதவிக் காலத்தை 5 வருடங்களாக குறைக்காமைக்கு தனது தவறே காரணம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் காலியில் ஆற்றிய உரைக்கு பதில் வழங்கும் வகையில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் அதிகூடிய பதவிக் காலத்தை 6 வருடங்களிலிருந்து 5 வருடங்களாக குறைக்காமல் விட்டமைக்கு ஜயம்பதி விக்ரமரத்னவின் அனுபவ குறைவினால் ஏற்பட்ட தவறே காரணம் என நேற்று முன்தினம் ஜனாதிபதி கூறினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன, 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்பிற்கு விடாமல் தயாரிப்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதியாக அமைந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை தயாரிப்பதற்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன மாதுலுவாவே சோபித தேரர் தலைமையிலான 49 சிவில் அமைப்புகளுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முழுமையாக நீக்குவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட்டார் என அவர் கூறினார்.

அதற்கு மறுதினம் ஜாதிக ஹெல உறுமய கட்சியுடன் மக்கள் கருத்துக் கணிப்பிற்கு செல்லும் எந்தவொரு அரசமைப்பு திருத்தத்திற்கும் செல்வதில்லை என உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே அதிகூடிய பதவிக்காலம் 5 வருடங்களாக குறைக்கப்படவில்லை என ஜயம்பதி விக்ரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை அடிப்படையாகக்கொண்டு, தாம் உள்ளிட்ட குழுவினர் திருத்தத்தை தயாரித்து அரசமைப்பு விவகாரத்திற்கு பொறுப்பாகவிருந்த பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உப குழுவிடம் சமர்ப்பித்தனர் என அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 83ஆவது பிரிவை திருத்துவதற்கு மக்கள் கருத்துக் கணிப்பு அவசியமெனவும் ஜயம்பதி விக்ரமரத்ன தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தத்தை மேற்கொள்ளும் போது, தயாரிக்கப்பட்ட அனைத்து சட்டமூலங்களையும் அமைச்சரவை உப குழுவுடன் கலந்துரையாடிய பின்னரே சட்டவரைஞர்களுக்கு அனுப்பினர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்ட மா அதிபருடன் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடினார் எனவும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆவது திருத்தத்தை ரணில் விக்கிரமசிங்கவே சமர்ப்பித்தார் எனவும் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டபோது அரசாங்கம் சார்பில் ஆஜரான சட்ட மா அதிபர் எவ்வித திருத்தத்திற்கும் மக்கள் கருத்துக்கணிப்பும் அவசியம் இல்லை என கூறினார் எனவும் ஜயம்பதி விக்ரமரத்ன தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மக்கள் கருத்துக்கணிப்பு அவசியம் என உயர் நீதிமன்றம் தீர்மானித்த பகுதிகள் நாடாளுமன்றத்தில் திருத்தப்பட்டன எனவும் சில திருத்தச் சரத்துக்கள் கைவிடப்பட்டன எனவும் அவர் சுடடிக்காட்டியுள்ளார்.

இதன்படி, மக்கள் கருத்துக்கணிப்பிற்கு செல்லாத வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதிக்கு அமையவே அரசமைமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர்களைத் தாக்கும் சுவாச நோய்கள் பெற்றோருக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை



சிறுவர்கள் மத்தியில் ஆஸ்த்துமா மற்றும் சுவாச நோய்களின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளதாக ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இன்புளுவென்சா மற்றும் சாதாரண வைரஸ் தொற்று என்பன தற்போது பரவி வரும் நிலையில், அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அவர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம் தற்போதைய காலத்தில் வைரஸ் தொற்று ஒன்று பரவி வருவதால், அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இருமல் உள்ளவர்கள் முகக்கவசம் அணிவதால் இந்த வைரஸ் தொற்று பரவலடைவதில் இருந்து பாதுகாப்பு பெற முடியும் என விசேட வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.



# கினிகத்ஹேனையில் தீப்பற்றி எரிந்த கார்

பாணந்துறையில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த கார் ஒன்று கினிகத்ஹேனை – தியகல பகுதியில் வைத்து திடீரென தீப்பற்றியுள்ளது.

இதன் காரணமாக நேற்று முற்பகல் 11 மணிமுதல் சுமார் ஒரு மணிநேரம் அந்த வீதியுடனான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டதாக கினிகத்ஹேனை பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த காரில் 5 பேர் பயணித்த நிலையில், காரில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட ஒருவர் எரிகாயத்திற்கு உள்ளாகியுள்ளார்.




இந்தநிலையில், கார் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கார் தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவரவில்லை. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை 31,017ஐத் தாண்டியது

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 31 ஆயிரத்து 17 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மேல் மாகாணத்தில் 12 ஆயிரத்து 153 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகமாக உள்ளதால், பொதுமக்கள் தங்களது வீட்டுச் சுற்றுப்புறங்களைச் சுத்தம் செய்வதில் அவதானம் செலுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

# தினசரிப் படியை 1,700 ரூபாவாக வழங்கும் வரை மாதாந்தம் ரூ.5,000 மேலதிகமாகக் கொடுங்கள்!

## ஜனாதிபதியிடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை

(எஸ்.கீதபொன்கலன்)



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம், நீதிமன்ற தலையீட்டால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், 1,700 ரூபா சம்பளம் வழங்கும் வரை தற்காலிக தீர்வாக இடைக்கால கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபா அரசாங்கம் வழங்க வேண்டுமென இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாட்டில் கொவிட் தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் பெருந்தோட்ட மக்கள் பொருளாதார பின்னடைவை சந்தித்து இருந்தனர். ஏனைய சமூகத்தினருக்கு 5,000 கொடுப்பனவு வழங்கிய போதும் பெருந்தோட்ட மக்கள் அரச அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வேலைக்கு செல்கின்றனர் என வும், அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி வழங்கப்படுவதாலும் அவர்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்க முடியாது எனவும் அரச அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் அப்போதைய பிரதமரின் இணைப்பு செயலாளராக இருந்த செந்தில் தொண்டமான்,இப்பிரச்சினை குறித்து அப்போதைய பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்று, 5,000 ரூபா வழங்குவதற்கான நியாயமான அரச ஆவணங்களை பிரதமரிடம் சமர்ப்பித்து, இந்த நிவாரண தொகையை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்க ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி செயலாளர் ஆகியோருடன் பல முறை கலந்துரையாடி மலையகம் முழுவதும் குறித்த தொகையை இடைக்கால நிவாரணமாக பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது 1,700 ரூபா சம்பளம் தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வரை இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்க மாவட்டம் வாரியாக தொழிலாளர்களின் பட்டியல், நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை, தற்காலிக தொழிலாளர்கள் எண்ணிக்கை என அனைத்து ஆவணங்களையும் செந்தில் தொண்டமான் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

அதற்கமைய செந்தில் தொண்டமானின் கோரிக்கையை விரைவாக ஆய்வு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் 1,700 ரூபா சம்பளத்தை பெறுவதற்கு தற்போது உள்ள சட்ட சிக்கல்கள் குறித்து ஜனாதிபதியிடம் செந்தில் தொண்டமான் எடுத்துரைத்தமையுடன், மாற்று வழிகள் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண்டார்.



# பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 2,379 பேர் கைது செய்யப்பட்டனர்

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலக கும்பலுடன் தொடர்புகளை பேணியதாக சந்தேகிக்கப்படும் மேலும் 29 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் இந்த சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலை சேர்ந்தவர் என கைதான நபர் 39 வயதுடையவர் ஆவார்.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 2,379 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# தமிழ்த் தேசியப் பேரவை

# மற்றோர் மூத்தோர் குழாமா?!



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் கோதாவில் இறங்கியிருக்கின்ற அரசியல் பத்தியாளர்கள் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினரின் செயற்பாடுகள் சற்றுத் தேக்க நிலையை அடைந்திருப்பதாக தெரிகின்றது. யாழ்ப்பாணத்தில் “மக்கள் மனு“ என்ற பெயரில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் யோசனையோடு இறங்கிய குழுவினர், நாளும் பொழுதும் ஊடகங்களுக்கு பரபரப்பாக செய்திகளை வழங்கிக் கொண்டுவந்தார்கள். புதிதாகச் செய்திகளை வழங்க முடியாதபோது, தமிழ் சிவில் கட்டமைப்பு, தமிழ் மக்கள் பொதுச் சபை, தமிழ்த் தேசியப் பேரவை என்று வாரத்துக்கு ஒருதடவையேனும் தங்களின் பெயரைப் புதுப்பித்து ஊடகங்களுக்கு அறிவித்தார்கள். ஆனால், கடந்த சில வாரங்களாக எந்தச் சலனத்தையும் காணவில்லை.

குறிப்பாக, இந்த மாதத்தின் முதல் வாரத்தில், பொது வேட்பாளர் விடயத்தில் இணங்கியிருக்கின்ற அரசியல் பத்தியாளர்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அப்படியான எவையும் நடைபெறவில்லை. மாறாக, அந்தக் குழுவில் இருக்கின்ற பத்தியாளர்களும் கட்சியினரும், “இரா.சம்பந்தன் ஒரு தோற்றுப்போன தலைவர்“ என்ற விடயத்தை முன்வைத்து உரையாடுவதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த உரையாடல்களின் நீட்சியைப் பார்த்த மூத்த ஊடகவியலாளரான வீ.தனபாலசிங்கம், “தமிழ்த் தேசிய அரசியலில் வெற்றி பெற்ற தலைவர் யார்?“ என்ற தொனிப்பட கேள்வி எழுப்பியிருந்தார். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தந்தை செல்வா மறைந்த போதும், தலைவர் பிரபாகரன் களத்தில் போராடி வீழ்ந்த போதும், சம்பந்தன் இன்று விமர்சிக்கப்படும் அளவைத் தாண்டிய விமர்சனத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். அதுவும், தமிழ்ப் பரப்பில் சாம்பல் அரசியலை செயற்பாட்டு நெறியாக கைக்கொள்ள வேண்டும் என்று போதிக்கும் மூத்த பத்தியாளர்களில் சிலர், தலைவர் பிரபாகரனை தோற்றுப்போன தலைவர் என்று மாத்திரமலஸ்ரீ. அவரை மரணத்தின் தூதுவன், பாசிசவாதி என்ற அடையாளங்களைக் கொண்டு விமர்சித்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான காலத்தில் வெளியான அந்த விமர்சனங்கள், ராஜபக்ஷக்களினதும் அவர்களின் துணைக்குழுக்களினதும் அழுத்தங்கள் காரணமாக முன்வைக்கப்பட்டிருக்கலாம் என்ற உணர்நிலை இந்தப் பத்தியாளரிடம் உண்டு. இன்னமும் அந்த விமர்சனங்கள் இணையம் பூராவும் கொட்டிக் கிடக்கின்றன. நிர்ப்பந்தங்களினால், முன்வைக்கப்படும் விமர்சனங்களை அவ்வளவுக்கு கருத்தில் கொள்ளத் தேவையில்லை என்ற அளவில் அவற்றைக் கடந்துவிடலாம். ஆனால், அந்த விமர்சனங்களை, அதன் நீள அகலங்களை அறியாத சில புலம்பெயர் தரப்புக்கள், சம்பந்தனின் தோல்வி தொடர்பில் இந்தப் பத்தியாளர்களின் உரையாடல்களைத் தூக்கிச் சுமக்கும் போதுதான், தனபாலசிங்கம் எழுப்பிய கேள்வியின் நியாயம் மேலேழுகின்றது.

களத்தில் நேரடியாக இறங்கி செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கும் விமர்சனங்களைச் செய்வதற்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு. அதனை உணராது கடந்த காலங்களில் மூர்க்கமான விமர்சனங்களை அரசியல் தலைமைகள், கட்சிகள் மீது முன்வைத்து வந்த பத்தியாளர்களில் ஒரு தரப்பினர்தான், இப்போது தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தூக்கிச் சுமக்கிறார்கள். அரசியல் தீர்மானங்களும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் எதிர்கொள்ள வேண்டிய நடைமுறைச் சிக்கல்கள் என்னென்ன என்பதை இப்போதுதான், பத்தியாளர்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலோ, வவுனியாவிலோ கூடிப் பேசுவது மட்டுமல்ல, அங்கு பேசப்பட்ட விடயங்களை அடுத்த கட்டங்களுக்கு நகர்த்துவது என்பது தலையால் நடக்க வேண்டிய அர்ப்பணிப்பைக் கோருவதாகும். அதிலும், தற்போதுள்ள அரசியல் கட்சிகளையும் அதன் தலைமைகளையும் ஓர் அணிக்குள் இணைத்து விடயங்களை முன்னெடுப்பது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. தேர்தல் – வாக்கு அரசியல் வெற்றி தோல்விகள் குறித்தெல்லாம், கட்சிகளும் அதன் தலைமைகளும் ஆலோசித்துத்தான் முடிவெடுக்கும். அதிலும், அந்தக் கட்சிகளின் மீதான அக – புறச் சக்திகளின் அழுத்தங்கள், நாளுக்கு நாள் தீர்மானங்களை மாற்றும் வல்லமையுள்ளவை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முதன்முதலில் அரங்குக்கு கொண்டு வந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியிலுள்ள கட்சியினரே, கடந்த சில மாதங்களில் மாறி மாறி முடிவெடுத்திருக்கிறார்கள். அவர்களிடம் நிலையான தீர்மானம் என்ற ஒன்று இல்லை. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இந்தியத் தூதரைச் சந்தித்துவிட்டு வந்த, கட்சியினரி

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியப் பேரவை

# மற்றோர் மூத்தோர் குழாமா?!

தொடர்ச்சி▲

டம் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் தான், தமிழ்த் தேசியப் பேரவையினரிடம் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தள்ளியிருப்பதாக கூறப்படுகின்றது. அதுபோக, தற்போது ஆடி மாசம் பிறந்துள்ளதால், இப்போது புதிய விடயங்களை ஆரம்பிப்பது நல்ல தல்ல என்பது, இன்னொரு அரசியல் தலைவரின் நிலைப்பாடு. அதுவும்கூட ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை தாமதமாக்கின்றதா என்று தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கி விட்டது. ரணில் விக்ரமசிங்க குழப்பங்களை ஏற்படுத்தி தேர்தலை ஒத்திவைக்கும் நாடகத்தை அரங்கேற்றாமல் விட்டால், தேர்தலுக்கு இருப்பது குறைந்த நாள்களே. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான காலம் ஏற்கனவே வந்து விட்டது. தேர்தல் ஆணைக்குழு நினைத்தால், அதனைச் செய்யலாம். சோதிடம் பார்த்து அதன் பிரகாரம், நல்ல நாள் – நேரத்தின் படிதான், அறிவிப்புச் செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தத்தினால் தேர்தலுக்கான அறிவிப்பு தள்ளிப் போய்க் கொண்டிருக்கலாம். எதுவாக இருந்தாலும், தேர்தல் மிக நெருக்கத்தில் வரப்போகின்றது. அதற்குள் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்பினர், தங்களுக்கு இடையில் உடன்பாட்டு ஒப்பந்தத்தைச் செய்து, வேட்பாளரை தேடிக் கண்டுபிடித்து அறிவித்தாக வேண்டும். ஆனால், அப்படியான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக தெரியவில்லை. மாறாக, அவர்களும் அடுத்த கட்டம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மையினால் அல்லாடுகிறார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்கும் பத்தியாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் தொடர்பில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர், கீழ்க் கண்டவாறு கருத்து வெளியிட்டார். ”...பொது வேட்பாளர் விடயத்தை இப்போது முன்னெடுக்கும் தரப்பினர் யார் என்று பார்த்தால், அவர்களும் மற்றோர் தமிழ் மூத்தோர் குழாம் (வுயஅடை ரஉெடந உடரழ) தான். அங்கும் பெண்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் இடமில்லை. இப்போது அவர்கள், பொது வேட்பாளர் காவடியைத் தூக்கிவிட்டார்கள், அதனை எப்படி இறக்கி வைப்பது என்ற மனச் சங்கடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது போட்டி போடுவது மற்றவர்களோடு அல்ல. மாறாக, அவர்களின் தன்முனைப்பு மன நிலையுடன்...” என்று. தமிழ்த் தேசிய அரசியலை ஓய்வூதியர்களும், மூத்தோரும் ஆக்கிரமித்துக் கொள்வது வழமையானது. எழுபதுகளின் இறுதியில், தமிழ் அரசியலை இளைஞர்கள் கையில் எடுக்க ஆரம்பித்த போது, அப்போதிருந்த மூத்தோர், “இந்தப் பெடியள் எல்லாவற்றையும் குழப்பப் போகிறார்கள்“ என்று பேசினார்கள். ஆனால், வெற்றி தோல்விகளுக்கு அப்பால், அந்த இளைஞர்களிடம்தான், முப்பது ஆண்டுகால தமிழ்த் தேசியப் போராட்டம் இருந்தது. அப்போது இளைஞர்களாக இருந்தவர்களில் இன்று மூத்தோர் ஆகிவிட்ட சிலர், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களின் இளம் வயதில், இருந்த துணிவோடும் அர்ப்பணிப்போடும் இல்லை. அவர்களில் அநேகர் வாக்கு அரசியலுக்கான மனிதர்களாக தங்களைச் சுருக்கிக் கொண்டு, மூத்தோர் அரசியலின் பங்காளிகள் ஆகிவிட்டார்கள். அவர்களைப் போலவே, தமிழ்த் தேசியப் பேரவையில் இருக்கின்ற பத்தியாளர்களும் இயங்க நினைக்கிறார்கள். தங்களின் கருத்துக்களைத் தாண்டி கருத்துக்கள், உரையாடல்களில் வலுப்பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. பெண்களின் கருத்துக்களை அவர்கள் கண்டு கொள்வதில்லை. பெண்களை, தாங்கள் முன்வைக்கும் தீர்மானங்களை அங்கீகரித்து கைச்சாத்திடும் தரப்பினராகவே கைக் கொள்ள நினைக்கிறார்கள். அதனால்தான், தமிழ்த் தேசியக் கட்சிகள் போல, தமிழ் சிவில் அமைப்புக்கள் தொடங்கி இன்று புதிதாக நாமம் பெற்றுள்ள தமிழ்த் தேசியப் பேரவைக்குள்ளும் இருந்தும் பெண்களின் குரல்களைக் கேட்க முடியவில்லை.

பொது வேட்பாளராக பெண்கள் யாரையாவது முன்னிறுத்தலாம் என்ற உரையாடல் தமிழ்த் தேசியப் பேரவைக்குள் உண்டு. அந்தப் பெண்ணின் அடையாளம் என்பது, முன்னாள் போராளியின் மனைவி, மகள், அரசியல்வாதிகளின் வாரிசு என்ற அளவைத் தாண்டி அடுத்த கட்டத்துக்கு நகரவில்லை. யாரோ ஒரு ஆணின் அடையாளத்தினால் முன்னிறுத்தப்படும் வாரிசுப் பெண்களைக் குறித்துத்தான் சிந்திக்கிறார்கள். சுயாதீன சிந்தனையுள்ள பெண்களை முன்னிறுத்துவது தொடர்பிலான உரையாடல்கள் பத்தியாளர்கள் மத்தியிலும் இல்லை. தெற்காசிய அரசியலில் பெண்களின் அரசியல் வகிபாகம் என்பது, வாக்களிப்பவர்கள் என்ற அளவைத் தாண்டி பெரிதாக உயரவில்லை.நேரடி அரசியலில் இருக்கும் பெண்களில் தொண்ணூறு வீதத்தினர் வாரிசு அரசியலினால் அடையாளம் பெற்றவர்கள். பெண்களுக்கான இடஒதுக்கீடு என்ற நிர்ப்பந்தத்தினால், பெண் வாரிசுகளை கட்சிகள் உள்வாங்குவது வழக்கம். அதனைத்தான், தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருக்கின்ற கட்சிகளும் செய்து வந்திருக்கின்றன. இலங்கை அரசியலில் சிறிமாவோ பண்டாரநாயக்க தொடங்கி சந்திரிக்கா குமாரதுங்க, அனந்தி சசிதரன், விஜயகலா மகேஸ்வரன் வரையில் வாரிசு அரசியலின் அடையாளங்கள்தான். தொடர்ச்சியாக கருத்துருவாக்கத்தைச் செய்து வருகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் பத்தியாளர்களும், பெண் அரசியல் வாரிசுகளை தங்களின் வேட்பாளராக முன்னிறுத்தும் உரையாடல்களை முன்னெடுப்பதும் ஆணாதிக்க மனநிலையினால்தான். ஏனெனில், அவர்களுக்கு தாங்கள் சொல்வதை கேட்டு சொல்லும் ஒருவர்தான் தேவைப்படுகிறார். அதற்கு, அரசியல் பெண் வாரிசுகள் என்றால், இலகுவானது என்பது அவர்களின் நிலைப்பாடு. தமிழ்த் தேசியப் பேரவையின் தீர்மானிக்கும் குழுவாக அறிவிக்கப்பட்ட குழுவில், பெண்கள் என்று யாரையும் காண முடியவில்லை. அதன் பிரகாரமும், அவர்கள் ஒரு தமிழ் மூத்தோர் குழாம் (Tamil uncle club) என்பதை அவர்கள் நிரூபிக்கிறார்கள்.

தன்முனைப்பு மனநிலையை தூர வைத்துவிட்டு செயற்பாட்டு அரசியலுக்கு வராத எந்த நபரினாலும், அரசியலில் நல்ல மாற்றங்கள் சாத்தியமில்லை. அது, தமிழ்த் தேசிய அரசியலில் இருக்கும் அனைவருக்கும் பொருந்தும். தனிப்பட்ட கோபதாபங்கள் – இலாப நட்டக் கணக்குகளுக்கு அப்பாலான, மனநிலையுள்ள அனைவரையும் சமமாக நோக்கும் அரசியல் தமிழ்த் தேசிய அரங்கில் பிறக்க வேண்டும். இல்லையென்றால், தொடர்ந்தும் மேலிருந்து தீர்மானங்களை எடுத்துவிட்டு, மக்களிடம் இறக்கி வைக்கும் திணிக்கும் அரசியல் கோலோச்சும்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான அரசியலில் சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் தீர்மானங்களை எடுத்துவிட்டு மக்களின் தலையில் இறக்கி வைக்கும் வேலைகளை மாத்திரமே செய்து வந்திருப்பதாக தமிழ்த் தேசியப் பேரவைக்குள் இருக்கும் அரசியல் பத்தியாளர்களும், கட்சியினரும் தொடர் விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், இவர்கள் யாரோடு உரையாடி என்ன வகையிலான கருத்துக்களை உள்வாங்கி பொது வேட்பாளர் கோசத்தோடு வந்தார்கள் என்ற கேள்வி

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியப் பேரவை

## மற்றோர் மூத்தோர் குழாமா?!

தொடர்ச்சி▲

எழுகின்றது. யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தாங்கள் கூடிப் பேசிவிட்டு தீர்மானங்களை அறிவித்துவிட்டு, அதனை மக்களின் முடிவு என்று அறிவிக்கும் அதிகாரத்தை இவர்களிடம் யார் வழங்கியது?

தமிழ்த் தேசிய அரசியலில் வட்டுக்கோட்டைத் தீர்மானமும், சுதுமலைப் பிரகடனமும் முக்கியமாவை. அவற்றின் வெற்றி தோல்விகள் தொடர்பிலான உரையாடல்கள் இருந்தாலும், அவை இரண்டுக்கும் குறித்தளவு அரசியல் முக்கியத்துவம் இன்றும் உண்டு. அந்தப் பெயர்கள் தமிழர் அரசியலில் ஆளுமை செலுத்தியவை. தமிழ்த் தேசியப் பேரவையாக நாமம் சூட்டுவதற்கு முன்னர், அரசியல் பத்தியாளர்கள் உள்ளடங்கிய தரப்பினர், “வவுனியா தீர்மானம்“ என்ற ஒன்றை அறிவித்தார்கள். அதனை, ஊடகங்கள் அவ்வளவுக்கு தூக்கிச் சுமக்கவில்லை என்ற போதிலும், இன்றைய பேரவையினர் அப்போது கூட்டிய நாமம், வவுனியா தீர்மானம் என்பதாகும். ஏற்கனவே, “இமயமலைப் பிரகடனம்“ என்ற பெயரில் அக – புறத் தரப்பினர், ஒரு கோமாளிக் கூத்தை சில மாதங்களுக்கு முன்னர், ஆடியிருந்தார்கள். வட்டுக்கோட்டைத்தீர்மானத்துக்குப்பின்னரானதமிழ்த்தேசியப் போராட்டத்தை அர்ப்பணிப்போடு தூக்கிச் சுமந்தவர்களினால்தான், சுதுமலைப் பிரகடனம் முன் வைக்கப்பட்டது. அந்தப் பிரகடனத்துக்குப் பிறகான கால் நூற்றாண்டு காலம், அந்தப் பிரகடனத்தை நிலைநாட்டுவதற்காக அதனை முன்வைத்தவர்கள் களத்தில் போராடி விழும் வரையில் உழைத்தார்கள். ஆனால், இப்போது வவுனியா தீர்மானம் என்ற ஒன்றை அறிவித்தவர்கள், அடுத்த சில நாட்களிலேயே, அந்தத் தீர்மானத்திலுள்ள சரத்துக்களை மறந்தும் மாற்றியும் வந்திருக்கிறார்கள். அவை, அவசரக் குடுக்கைகளின் செயற்பாடுகளை ஞாபகப்படுத்தின. மக்களுக்காக அரசியலை முன்னெடுப்பவர்கள், மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டு, அவர்களைப் பிரதிபலித்து மேலெழ வேண்டும். மாறாக, மக்களின் மண்டைகளில் தீர்மானங்களைத் திணிக்கும் தரப்புக்களாக இருக்கக் கூடாது. அதனை, செய்யும் மற்றொரு தரப்பினராக அரசியல் பத்தியாளர்களும், அவர்கள் அடங்கிய தமிழ்த் தேசியப் பேரவையினரும் இருக்கக் கூடாது. இல்லையென்றால், அவர்களும் இன்னோர் தமிழ் முத்தோர் குழாமாக வரலாற்றில் பதியப்படுவார்கள்.



# பல்கலை முறைமையை மறுசீரமைக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்க வேண்டுமானால் பல்கலைக்கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நேற்று மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டமையுடன், மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இதன்போது, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

மேலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வையொட்டி நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில் –

“1985 இல் ஹிஸ்புல்லாஹ்வை நான் முதன் முதலில் இளைஞர் சேவை மன்றத்தில் சந்தித்தேன். அவர் இன்று இந்த சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துள்ளார். இந்த பல்கலைக்கழகம் நமது பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவைக்கொண்ட மக்களே நமது நாட்டிற்கு அவசியமாகும். அதனால் தான் இந்தப் பல்கலைக்கழகம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது.

நமது நாட்டின் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு மிகவும் நன்றி. இப்பல்கலைக்கழகத்துடன் தற்போது கிழக்கு

தொடர்ச்சி▼



# பல்கலை முறைமையை மறுசீரமைக்க வேண்டும்

தொடர்ச்சி▲

மாகாணத்தில் மூன்று பல்கலைக் கழகங்கள் உள்ளன.

இந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் அல்ல. இந்நிறுவனத் திற்கும் கிடைக்கும் நிதி சேமிக்கப்பட்டு, குறித்த நிதி இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கே பயன்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் இலாபம் ஈட்டாத தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளன.

ஹார்வர்ட், ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களை இலாப நோக்கமற்ற பல்கலைக்கழகங்கள் என்று அழைக்கலாம். கொத்தலாவல பல்கலைக்கழகம், NSBM பசுமைப் பல்கலைக்கழகம், SLIIT நிறுவனம் போன்றவையும் இலாப நோக்கமற் றவை.

சிலர் இவற்றை பட்டங்களை விற் பனை செய்யும் கடைகள் என்று கூறினர். அப்படியானால், கேம்பிரிட்ஜ், ஹார்வர்ட், ஒக்ஸ்போட் பல்கலைகழ கங்களும் பட்டங்களை விற்கும் கடை களா? அந்த மனப்பான்மையால்தான் இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்கள் வீழ்ச்சியுற்று வருகின்றன. எனினும், இவற்றை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும்.

அன்று இருந்தது போன்று இன்று பல்கலைக்கழகங்கள் இல்லை. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர் களின் கல்வியை சீர்குலைக்கும் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் ஒரு சர்வாதிகாரத்தைப் போல மாண வர்களைக் கையாளுகின்றன. இத் தகைய சூழலில் கற்பிக்கும் விரிவுரை யாளர்களைப் பாராட்டுகிறேன்.

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற் கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது. பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல் கலைக்கழக முறைமை மறுசீரமைக் கப்பட வேண்டும். நாளை முதல் சமூக வலைதளங்களில் இதனைச் சொல்லி என்னைக் குறை கூறலாம். பல்கலைக் கழகத்தில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பல்கலைக்கழகத் திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற வேண்டும்.

இப்பல்கலைக்கழகம் அபிவிருத்தி யடைந்தால் ஏனைய பல்கலைக்கழக கட்டமைப்புகளும் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கின்றேன். மேலும் இது போன்ற பல பல்கலைக்கழகங்கள் இன்னும் உருவாகும் என்று எதிர் பார்க்கின்றேன்.

இந்நாட்டில் உயர்கல்விக்காக விசேட பணியை ஆற்றிய லலித் அத்துலத் முதலி பெயரில் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவும் நாம் எதிர்பார்த் துள்ளோம். தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் உட்பட நான்கு கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க அரசாங் கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.” – என்றார்.



















# மரணத்தில் மகிழும்
# நெறி பிறழ்ந்த சமூகம் ஆகிறோமா?



வி.எஸ்.சிவகரன்

'காடாற்ற முதல் வீடாற்றாதே!' எனும் கிராமிய வழக்குண்டு. இறப்பு என்பது இயல்பானதே. உதித்தவை எல்லாம் உதிர்வன என்பது இயற்கையின் நியதி. எதையும் கேள் தருகிறேன், மரணத்தை மட்டும் கேளாதே என்றார் எமதர்மன். துறவிகளுக்கு மரணம் சுகமானது. பேரின்ப நிலை பேறடைதல் என்கிறார்கள்.

**பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநடவாதே.**

– என்கிறார் திருமூலர்.

இதை ஒவ்வொரு மனிதரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வுணர்வு எந்நிலையிலும் எழாத வரை வாழ்வு ஆணவத்தின் உச்சமே. அகம்பாவத்தின் மிச்சமே.

பிறந்தன இறக்கும். இறந்தன பிறக்கும். தோன்றின மறையும். மறைந்தன தோன்றும். பெருத்தன சிறுக்கும். சிறுத்தன பெருக்கும். உணர்ந்தன மறக்கும். மறந்தன உணரும். புணர்ந்தன பிரியும். பிரிந்தன புணரும் என்கிறார் பட்டினத்தார்.

நாம் எவர் கருத்தியலைத் தான் புரியப் போகிறோம்? உயிர்வன இறந்து விட்டால் இறையென விழிக்கும் மரபுசார் பண்பு நெறி கொண்ட ஒழுங்குடையவர்கள் உளர். யுத்த களங்களில் கூட எதிரி மடிந்து விட்டால் போர் வீரனுக்கு உரிய மரியாதை பின்பற்ற வேண்டும் என்கின்றன தமிழ் இலக்கியங்கள். விலங்குகள், பறவைகள் இறந்தால் கூட அதற்குரிய பண்பாட்டை வெளிப்படுத்துகிறோம்.

ஆனால் நாம் தற்காலத்தில் பொது வெளியில் மரணத்தில் மகிழ்கிறோம். இந்த மூன்றாம் தர மனோநிலை எமக்கு எப்படி உருவாகியது? எங்கிருந்து உருப்பெற்றது? உலக ஒழுங்கிற்கு அடிநாதமிட்டவர்கள், மரபை விதியாக்கியவர்கள், சிற்றின்ப பேறிற்காய் நெறி பிறழலாமா? படித்தவர்கள் எனக் கூறுபவர்கள் தொடக்கம் கேள்விச் செவியர்களான முகநூல் போராளிகள் வரை இழிநிலையில் இதழ்விரிப்பாளர்கள் ஆகிவிட்டனர். எவரை எவர் கடிந்து கொள்வது? காழ்ப்புணர்வு, கசப்புணர்வு, பசப்புணர்வு பிணத்தின் மீது கூட வருகிறது என்றால் நீ மனிதனா எனச் சிந்திக்க வேண்டும்.

இனி, விடயத்திற்கு வருவோம்.

சம்பந்தன் மேல் இப்பத்தியாளர் உட்பட பலருக்கு ஆயிரம் விமர்சனம் உண்டு. அவர் விமர்சனத்துக்கு உட்பட்டவர். விமர்சிக்கப்பட வேண்டியவர். ஏனெனில் அவர் பொது வாழ்வில் இருந்தவர். அதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், அவர் மரணத்தை மகிழலாமா? அன்றைய நாள் தீபாவளியென சிலர் மகிழ்ந்து கொண்டாடினார்கள். கவி பாடியும் புளகாங்கிதம் அடைந்தனர். மரத்திற்கு கூட உணர்வு உண்டு. அது மனிதனுக்கு எங்கே போனது.? இறந்தவர் உடலம் இயற்கையோடு சங்கமிக்கும் வரை இகழ்வது தகுமா? தமிழர் மரபாகுமா? பண்பாட்டுக்கு இழுக்காகாதா? ஒழுக்க நெறிகெடாதா? விழுப்பம் பேசிய நாம் இப்படி மரபு மீறுவது தகுமா? அவ்வளவு அவசரமாக விமர்சிக்க வேண்டிய அவசியம்தான் என்ன? உணர்வுக்

தொடர்ச்சி▼



# மரணத்தில் மகிழும் நெறி பிறழ்ந்த சமூகம் ஆகிறோமா?

**தொடர்ச்சி▲**

கோபத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் தெரியவில்லையா? அல்லது மொழியின் குறைபாடா? அரசியலில் நிச்சயம் மீள்வாசிப்பு செய்யப்பட வேண்டும். அதற்கும் கால நிர்ணயமும் அறமும் உண்டு. அதை பின்பற்றத் தெரியாதவர்கள் கட்சிகளிலோ, அமைப்புகளிலோ தொடர்வதில் எந்தப் பயனும் இந்தச் சமூகத்திற்கு இல்லை. பண்பாட்டுத் தொடர்ச்சியை பேண முடியாத சமூகம் எப்படி தனது தனித்துவத்தை தற்காத்துக் கொள்ளும்?

அறிவு பூர்வமாகவே ஆராய்வது தகும். உணர்வு பூர்வமாக அல்ல. அவருடைய அரசியல் செல்நெறியும், அவரது வகிபாகமும், அரசியல் தீர்மானங்களும் விவாதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அடுத்து வரும் தலைமைக்கும் அதிலிருந்து பாடங்களைக் கற்றுணர்ந்து, தெளிந்து, மீள வழி தேட முடியும்.

சம்பந்தன் விட்டுச் சென்ற இடைவெளி மிகப் பெரியது. அதை நிரப்பக் கூடிய அளவில் தற்போது எந்தத் தலைவரும் இல்லை என்பதே வெள்ளிடை மலையாககும்.

நீண்ட கால யுத்தத்துக்குள் மூழ்கி இருந்தமையால் ஜனநாயக அரசியலின் மிக நீண்ட இடைவெளி காணப்பட்டது. குடும்ப வாரிசுகளைத் தவிர, எந்தத் தலைவரும் தனக்குப் பிறகு தலைவரை உருவாக்குவதில் அக்கறை செலுத்துவதில்லை.

கிராமிய அமைப்புக்கள் தொடக்கம் இலக்கிய மன்றங்கள் வரை அரசியல் கட்சிகளிலும் எங்கும் தலைமைத்துவப் பதவி நிலைகள் என்பன நலனியல் சார்ந்த அடிப்படையிலேயே முதன்மையாகின்றன. 'வளர்த்த கடா மார்பில் பாயும்' எனும் நிலையில்தான் இரண்டாம் நிலைத் தலைவர்களை எவரும் உருவாக்க முன்வருவதில்லை – தன் பதவிக்கு ஆபத்து வந்து விடும் எனும் பட்டறிவு அச்சத்தினால். சம்பந்தரும் அதற்கு விதிவிலக்கு அல்லர். அவர் 'பதவி சுகபோகி' என்பது அவரின் கடந்த கால அரசியலை மீட்டிப் பார்க்கும்போது புரியும். கடந்த 70 ஆண்டுகளில் தமிழ்த்தேசியம் பேசிய எந்த தலைவரும் இவ்வாறு கொழும்புடன் இணக்கத்தை ஏற்படுத்தி இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என எண்ணிய வரலாறு இல்லை. அந்த அளவுக்கு கீழ் இறங்கினார். அதைக் கொழும்பு புரிந்து கொள்ளவில்லை. மாறாக, தமிழர் தரப்பின் எதிர்ப்பைத்தான் அவர் பிரதிபலனாகச் சம்பாதித்தார்.

அவரைப் புரிந்து கொள்ளாமையின் விளைவே அவர் மரணத்தில் மகிழ்ந்தமை எனலாம்.

ஆனால் சம்பந்தன் யாவற்றையும் அறியாமல் செயல்பட்டவர் அல்லர். தெளிவில்லாதவரும் அல்லர். எப்படியாவது தீர்வை பெற்று விட வேண்டும் என முயற்சித்தார். இந்தியாவை விடுத்து கொழும்பை நேசித்துப் பார்த்தார். எல்லாக் கதவுகளையும் திறக்க முற்பட்டார். சம்பந்தனின் எந்த மந்திரத்திற்கும் சிங்களம் அசையவில்லை. மாறாக, நம்பிக்கையூட்டி ஏமாற்றியது. அவர் அறியாமல் இருந்திருக்க மாட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. தீபாவளிக்குத் தீர்வு, பொங்கலுக்குத் தீர்வு என நம்பிக்கையூட்டினார். அதையும் பலர் கேலி செய்தனர்.

தற்போதைய சமூகத்தில் எதையும் ஆழமாக ஆராயாத இளைய சமூகம் உருவாகி வருகிறது. அவர்களிடம் எந்த விதமான இலக்குமில்லை, தூரநோக்கு சிந்தனையுமில்லை. எப்படியும் வாழலாம் எனும் வாழ்கைக்குள் சமூகத்தை சிதைக்க முற்படுகிறார்கள். ஏதிர்காலம் என்னவாக போகிறதே எனும் அச்சம் ஏற்படுகின்றது. இவர்கள் தலைமை தாங்கும் போது சமூகம் பரிதாபத்திற்கு உள்ளாகப் போகிறது.



சிங்கக் கொடியையும் தூக்கிப்பிடித்து பார்த்தார். மென்சக்தி அணுகுமுறையையும் திடப்படுத்தினார். அதில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டார். இனப் பிரச்சினைத் தீர்வே இலக்கு என்பதால் அன்றாட, அத்தியாவசிய பிரச்சுனைகளைக் கண்டுகொள்ளாமல் விட்டார்.

ஏழு தசாப்தமாக ஏமாற்றிய கொழும்பிற்கு சம்பந்தனும் ஒரு பொருட்டல்ல என்பதை பின்னர் உணர்த்தினார்கள். கொழும்பை, இந்தியாவை, சர்வதேசத்தைக் கையாள்வதில் பின்னடைவையே சந்தித்தார்.

இராஜதந்திர – இராஜீக அணுகு முறையில் திடமான வெற்றியை நோக்கிய தந்திர வியூகத்தை அவர் வகுக்கவில்லை எனும் விமர்சனமும் உண்டு.

சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் எவரும் இல்லாத காரணத்தினால் தள்ளாத வயது வரை சம்பந்தனிலேயே தங்கி இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அதுவும் சம்பந்தனின் தோல்வியே. சுமார் ஐம்பது ஆண்டு கால அரசியலில் சம்பந்தனினால் ஒரு துரும்பைக் கூட நகர்த்த முடியவில்லை. கட்சியைக் கூடக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியவில்லை.

அவரது ஆளுமையின் வல்லமையில் குறைபாடா அல்லது சுயநலத்தின் வெளிப்பாடா? தன் கட்சியையே காக்க முடியாதவர் தமிழ் மக்கள் நலனைக் காப்பார் என நம்பியது யார் தவறு?

காற்று இடைவெளியை நிரப்பும் என்றார் அறிஞர் அண்ணா. சம்பந்தனின் இடைவெளியை எது நிரப்பப் போகிறது? அதையும் காலத்திடம் எதிர்பார்த்துக் காத்திருக்க முடியுமா? தலைமையற்ற வெறுமைக்குள் ஆளுக்கு ஆள் ஏட்டிக்குப்போட்டி அரசியலை நடத்தி, உள்கட்சிக்குள்ளேயும் நீதி தேட வேண்டிய நிலையில் உள்ள கட்சிகளினால் தமிழ் மக்களின் இனப்பிரச்ச சினை சார்ந்து சிந்திக்க முடியுமா? அல்லது ஐக்கியத்தைப் பேண முடியுமா?

தமிழ் மக்களில் குறைந்தபட்சமேனும் நம்பக்கூடிய ஒருவர் தலைமை தாங்கக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் எவரும் தெரியாத நிலையில் சம்பந்தனின் மரணம் என்பது நீண்ட இடைவெளியே.

**'நன்றாற்ற லுள்ளுந் தவுறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.'**

– என்கிறார் வள்ளுவர்.




# வங்குரோத்தான வர்த்தகங்களைக் கையாள புதிய சட்ட மூலங்கள் அறிமுகப்படுத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



"தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பராட்டே சட்டத்தைத் தொடர்ந்தும் நீண்ட காலத்திற்குப் பேண முடியாது. எனவே வங்குரோத்தான வர்த்தகங்களை கையாள புதிய சட்டமூலமொன்று கொண்டுவரப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை நுண், சிறு, நடுத்தர நிறுவனங்களின் கூட்டமைப்பினால் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'இலங்கையில் உள்ள நுண், சிறு, நடுத்தர நிறுவனங்களின் ஆற்றலுடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் தீர்மானமிக்க முயற்சி' என்ற வேலைத் திட்டத்தில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, இலங்கை நுண், சிறு, நடுத்தர தொழில் முனைவோர் சம்மேளனத்தின் தலைவர் சசிகா டி சில்வா ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர்ளுடன் உடன்படிக்கையை எட்டிய பின்னர் அந்தக் கட்டமைப்புடன் செயற்படலாம் என்று தனியார் கடன் வழங்குநர்களும் எம்மிடம் தெரிவித்தனர். நிதி மற்றும் ஆதரவு கிடைக்காமல் எம்மால் எதுவும் செய்ய முடியாது.

அந்த நேரத்தில், சில அடிப்படை விடயங்களில் நாம் உடன்பட வேண்டியிருந்தது. அதன்படி, எதிர்காலத்தில் பணத்தை அச்சிடாமலும், வங்கிகளில் கடன் பெறாமலும் இருக்கும் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. வங்கிகளிலும் பல பிரச்சினைகள் இருந்தன.

இந்த இரண்டு முறைகளும் எமது முக்கிய வருமானமாக இருந்தன. நாங்கள் பயணித்த இந்த தவறான பாதையை விட்டுவிட்டு புதிய பாதையில் பிரவேசிக்குமாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அதன்படி, நாம் சரியான பாதையில் பிரவேசித்தோம். அதன்போது வருமானம் ஈட்டுவதற்காக, சில கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கும் மானியங்களை நீக்க வேண்டியிருந்தது.

ஒரு சில கூட்டுத்தாபனங்களுக்கு வருடத்திற்கு 700 முதல் 800 மில்லியன் ரூபா வரை மானியம் வழங்கியுள்ளோம். அந்த மானியங்களை இந்நாட்டு மக்களே செலுத்தினர். எனவே நாங்கள் அதை நிறுத்த வேண்டியிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிக்கத் தொடங்கியது.

அதன் மூலம் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லாததால் வட்வரியை அதிகரிக்க வேண்டியதாயிற்று. தற்போது நமது நாட்டுப் பணத்தில் நாட்டின் பொருளாதாரம் இயங்குகிறது.

ஒரு சுமை எங்கள் மீது சுமத்தப்பட்டது. ஆனால் நாங்கள் அதைச் சுமக்க வேண்டியிருந்தது. நம் சுமைகளை அவர்கள் சுமக்கும் முன் நாம் நம் சுமைகளை சுமக்கும் பொறுப்பை ஏற்க முடியும் என்பதை உலகிற்கு காட்டுமாறு அவர்கள் தெரிவித்தனர். நாம் அங்கிருந்தே ஆரம்பித்தோம். இறுதியாக, எங்களுடைய நாட்டுப் பணத்தில் அரச, கூட்டுத்தாபனங்கள் அனைத்தையும் சரியாக நிர்வகிக்க முடிந்தது. எனவே, உலக சந்தையின் எரிபொருளுக்கமைய எமது பொருள் விலையையும் சீரமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. சில செலவுகளை நீக்குவதன் மூலம் எரிபொருள் விலையை மேலும் குறைக்க வாய்ப்பு உள்ளது. வலுசக்தி விலைகளுக்கும் இதுவே நடைபெறுகிறது. சந்தை தொடர்பில் இன்னும் பல்வேறு விடயங்கள் உள்ளன.

அடுத்த ஆண்டு அனைத்து திறமையின்மைகளையும் அகற்ற எதிர்பார்க்கின்றோம். பொருளாதாரத்தை சீர்செய்த பின்னர், நாம் முன்னேற முடியும். வங்கிக் கட்டமைப்பும் பாதுகாக்கப்பட வேண்டும். வங்கிகளில், இலங்கை வங்கி, மக்கள் வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளுக்கு மீண்டும் மூலதனம் வழங்க வேண்டியிருந்தது.

அதற்காக நாமும் ஒரு தொகை பணத்தை செலவிட வேண்டியிருந்தது. தனியார் வங்கிகளுக்கும் அதனையே செய்ய வேண்டியிருந்தது. வங்கி முறைமையை பாதுகாத்துக் கொண்டு மட்டுமே நாம் முன்னோக்கி செல்ல முடியும்.

நாம் வழங்கும் சலுகைகள் போது மானவை அல்லவெனவும், பொருத்த மானவர்களுக்கு சலுகைகள் சென்றடைய வேண்டும் எனவும் உலக வங்கியும்

தொடர்ச்சி ▼

# வங்குரோத்தான வர்த்தகங்களைக் கையாள புதிய சட்ட மூலங்கள் அறிமுகப்படுத்தப்படும்

தொடர்ச்சி▲

ஆசிய அபிவிருத்தி வங்கியும் வலியுறுத்தின. அதன்படியே நாம் அஸ்வெசும வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். அஸ்வெசும ஊடாக சமூர்த்தியை விடவும் மூன்று மடங்கு அதிகமாக கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது. 18 இலட்சம் பயனாளிகள் எண்ணிக்கையை 24 இலட்சமாக அதிகரித்திருக்கிறோம். குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான முதன்மைத் திட்டமாகவே அதனை செயற்படுத்தினோம்.

எமது வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாத்து பாரிய வேலைத்திட்டங்களை முன்னோக்கி கொண்டுச் செல்லும் அதே நேரம் சிறு, நடுத்தர வர்த்தகர்களை வலுவூட்டும் வகையில் இருபது இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்க 'உறுமய' திட்டத்தை செயற்படுத்தினோம்.

திட்டத்தை நிறைவு செய்ய மூன்று முதல் நான்கு ஆண்டுகள் ஆகலாம். இதன் மூலம் 20 இலட்சம் நில உரிமையாளர்கள் உருவாக்கப்படுவர். அதேபோல் 200,000 பேருக்கு வீட்டு உரிமையையும் வழங்க ஆரம்பித்துள்ளோம். பெருந்தோட்டங்கள் கிராமங்களாக பிரகடனப்படுத்தப்படவுள்ளன. அதற்காகவும் காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குகின்றோம். இதன் கீழ், 20 - 25 லட்சம் பேருக்கு புதிய உரிமை கிடைக்கும். இவ்வாறு மக்களுக்கு உரிமையை உறுதிப்படுத்த பாடுபடுகிறோம்.

முதன்முறையாக, சாதாரண மக்களுக்கு உரிமைகளை வழங்கும் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். இவற்றில் விவசாய நிலங்களும் உள்ளன. ஆனால் விவசாய கிராமங்களிலேயே வறுமை நிலவுகிறது. அதற்குத் தீர்வாகவே விவசாய நவீனமயமாக்கலை கிராமத்திற்கு கொண்டு செல்கிறோம். இதன் மூலம் கிராமப் புறங்களில் பணப் புழக்கம் அதிகரிக்கிறது. உரிமையும் உறுதி செய்யப்படும். வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். தனி நபர் பணப் பெறுமதி அதிகரிக்கும். இந்த முயற்சிகளுக்கு இணையாக சிறு, நடுத்தர வர்த்தகர்களுடன் முன்னேற்றத்திற்கும் வழி ஏற்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது அவசியமாகும். தற்போதுள்ள கட்டமைப்பிற்குள் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தற்போது பராட்டே சட்டத்தை இடைநிறுத்தியுள்ளோம். ஆனால் அதை தொடர்ச்சியாக செய்ய முடியாது. எனவே, வங்குரோத்து நிலை குறித்த புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளோம். அது தொடர்பாக விவாதிப்பதற்கான பிரதிகளையும் வழங்க முடியும். முதலில் அதைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். மறுசீரமைப்பு தொடர்பிலான சில விடயங்களும் இதற்குள் காணப்படுகிறன."– என்றார்.

















# இன்றைய ராசி பலன்கள் - 21.07.2024




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கு.இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் கடின உழைப்பின் மூலமே பணியில் வெற்றி பெற முடியும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும் வாய்ப்பு குறைந்து காணப்படும்.

கண் மற்றும் பற்களுக்கான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். உணவு முறையில் கவனம் செலுத்தவும்.




இன்று சாதகமான நாளாக இருக்காது. இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருப்பது நல்லது. நீங்கள் சிறிது அனுசரித்து நேரத்தை சாதுர்யமாக நிர்வகித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணியில் சில தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தரமான பணிகளை வழங்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான இணக்கத்தன்மை இழக்க நேரலாம். நீங்கள் உங்கள் துணையுடன் சுமூகமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று அதிக பணம் செலவு செய்ய நேரும். இதனால் உங்களின் திருப்தி நிலை பாதிக்கப்படும்.

இன்று சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாளாக இருக்காது. அமைதியாக இருக்க வேண்டியது அவசியம். சம்பவங்களை ஏற்றுக் கொண்டு சாதுர்யமாக நிர்வகிக்க வேண்டும்.

பணியில் சில தவறுகள் நேரலாம். கவனமுடன் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் சர்ச்சைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏறபடலாம். கவனமுடன் செயல்பட்டு இவைகளை தவிர்க்கவும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை சாதுர்யமாக கையாள்வது சிறந்தது.

இன்று சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் உதவிகரமாக இருக்கும்.




இன்று முழுமையான நாளாக இருக்கும். உங்கள் இலக்குகளை முடித்து திருப்தி அடைவீர்கள். உங்கள் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

உன்னதமான திறமை மூலம் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பணி வளர்ச்சி குறித்த உற்சாகம் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் திருப்தியான நிலை காணப்படும். உங்கள் துணையுடன் வெளிப்படையாக அணுகுவதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலும்.

பணம் போதிய அளவைவிட அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நண்பர்களின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்கியது போல உணர்வீர்கள். புது மனிதர்களை சந்திப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் சம்பாதித்த பணத்தை சொத்தாக மாற்றிக் கொள்வீர்கள்.

இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கிய சிறப்பாக இருக்கும்.




இன்று மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும்.ஆன்மீக யாத்திரைக்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் சுய விழிப்புணர்வு ஏற்படும்.

பணியிடத்தில் மிதமான வளர்ச்சி காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கு உங்கள் நேரம் செலவாகும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசுவதில் தயக்கம் காணப்படும். எனவே உங்கள் துணையிடம் வெளிப்படையாகவும் நட்பான முறையிலும் பழக வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று வங்கியில் சேமிப்பை பராமரிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




பல தடைகளை சந்தித்த பின் நீங்கள் திருப்தி காண்பீர்கள். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்களுக்கு கவலை ஏற்படும்.

பணிச்சுமை அதிகமாக இருக்கும். அதிக சவால்கள் காணப்படும். பணி சம்பந்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு திருப்தி உணர்வீர்கள். குறைந்த புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

எப்பொழுது பணம் வரும் எப்பொழுது பணம் செல்லும் என்று உங்களால் கணிக்க இயலாது. இத்தகைய சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று நீங்கள் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும்.நண்பர்களின் உதவியும் ஆதரவும் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். நீங்கள் எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

பணியிடத்தில் நீங்கள் தனி முன்னேற்றம் காண்பீர்கள். நீங்கள் உங்கள் ஆற்றலை முழுமையாக பயன்படுத்துவீர்கள். அதே சமயத்தில் உங்கள் உண்மையான மதிப்பை உணர்வீர்கள்.

நீங்கள் இன்று காதலின் சுகத்தை அனுபவிப்பீர்கள். உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். நீங்கள் ஏழாவது சுவர்க்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள்.

உங்கள் கையிலிருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். பணப் பொழிவு அதிகமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.07.2024




இன்று சவாலான சூழ்நிலையில் வாழ வேண்டியிருக்கும். உங்களின் நேர்மறையான கண்ணோட்டம் வெற்றி பெற உதவும்.

உங்கள் பணியில் மந்த நிலை காணப்படும். சில சமயங்களில் பொறுமை இழப்பீர்கள். உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

குடும்பத்தில் காணப்படும் பிரச்சினை ஒன்றை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள விரும்பு வீர்கள். ஆனால் இதில் உங்களுக்கு திருப்தி குறைந்து காணப்படும்.

வீட்டின் புனரமைப்புக்காக பணம் செலவு செய்வீர் கள். இதனால் செலவுகள் அதிகரிக்கும். உங்களின் நெருங்கிய உறவுகளுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று நீங்கள் பொறுமை காக்க வேண்டும். இன்று நீங்கள் திட்டமிட வேண்டும். இல்லை எனில் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் அணுகு முறை யில் உறுதி தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக காணப்படாது. உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சி நிலவ இருவரும் ஒருவரையொருவர் அனுச ரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. இது தவிர்க்க முடியாதது. பயணத்தின் போது இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கால் வலி பாதிப்பு ஏற்படலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




நீங்கள் யதார்த்தமாகவும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மேற் கொள்வதில் சில தடைகள் காணப்படும். உங்கள் நாளை கவனமாகத் திட்ட மிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ள கூடுதல் முயற்சி தேவை. உங்கள் பணிகளை ஆற்ற கவனமாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் மாறுபடும் மன நிலையுடன் உங்கள் துணையை அணுகுவீர்கள். இதனை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

போதிய அளவு பணம் காணப்படாது. இது உங்க ளுக்கு கவலையை ஏற்படுத்தும். தேவையற்ற விஷயங்க ளுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

கால்களில் விறைப்புத் தன்மையால் பாதிக்கப்படு வீர்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று வெற்றி காண்பதற்குச் சிறந்த நாள். உங்களிடம் விரைந்து செயலாற்றும் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்களின் சரியான திறனை வெளிப்படுத்தும் ஆற்றல் உங் களிடம் காணப்படும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க செய லாற்றுவீர்கள். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த பலன ளிக்கும்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை கொண் டாடி மகிழ்வீர்கள். உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று நீங்கள் உங்கள் நிதிநிலையை முழுமையாக கட்டுப்படுத்துவீர்கள். நேர்மறையான மன நிலையுடன் சிறந்த நிதி கட்டுப்பாடு மேற்கொள்வீர்கள்.












# APIIT இலங்கை மாணவர் செயல் குழு Extravaganza 2024 ஐ துவங்குகிறது

ஆசிய பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (APIIT) இலங்கையின் மாணவர் செயல் குழு 10ஆவது Extravaganza 2024 ஐ துவங்குகிறது.

இந்த வருடம் இது ஒரு முக்கியமான மைல்கல்லாக விளங்குகிறது. ஏனெனில் Extravaganza அதன் 10 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது.

ஆசிய பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மாணவர்களின் விளையாட்டு திறனை வளர்த்து, நெருக்கத்தை ஊக்குவிக்கும் பாரம்பரியத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி, நாட்டின் 50 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் பங்கேற்பாளர்களுக்கிடையே விளையாட்டு உணர்வை ஊக்குவிக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது.

இளம் விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்வதற்கும், நீண்டநாள் தொடர்புகளை உருவாக்குவதற்கும் ஒரு மேடையாக Extravaganza விளையாட்டை தாண்டி அதன் தாக்கத்தை விரிவாக்குகிறது.

Extravaganza 2024 போட்டிகள் ஜூலை 27 முதல் செப்டம்பர் 8 வரை நடத்தப்படவுள்ளன, அதில் ஏழு வாரங்களின் தீவிர போட்டிகள் மற்றும் த்ரில்லர் ஆட்டங்கள் இடம்பெற உள்ளன.














# பிரான்ஸில் இடம்பெற்ற பிரசிடென்ட் கிளப் மாநாட்டில் பிரகாசித்திருந்த AIA இன் சிறந்த செயற்திறனாளர்கள்

பிரான்சின் கேன்ஸ் நகரில் நடைபெற்ற பிரமாண்டமான AIA பிரசிடென்ட் கிளப் மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாகக் கலந்து கொண்ட AIA இன்சூரன்ஸின் சிறந்த வெல்த் பிளானர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இப்பிரத்தியேக நிகழ்வானது AIA இன் உலகளாவிய அனைத்துச் சந்தைகளிலிருந்தான மிகச்சிறந்த செயற்திறனாளர்களைக் கௌரவிக்கும் விதமாகவே இடம்பெற்றிருந்தது.

இந்த மாநாடானது பொதுவாக உலகெங்கிலும் உள்ள மிகவும் கவர்ச்சியான இடங்களிலேயே நடைபெற்று வருகின்றது. தொடர்ச்சியாக 12 ஆவது வருடமாகவும் இடம்பெறும் இந்நிகழ்வில் இலங்கையின் பங்கேற்பானது இம்மதிப்புமிக்க உலகளாவிய நிகழ்வில் AIA ஸ்ரீலங்காவின் சிறப்பான நிலையினை வெளிப்படுத்தியிருந்தது.

இந்த ஆண்டு AIA இன் 18 வேறுபட்ட சந்தைகளில் இருந்து 268 முன்னணித் தலைவர்கள் மற்றும் முகவர்கள் பிரான்சில் ஒரு தனித்துவமான 5 நாள் மாநாட்டிற்காக ஒன்று கூடியிருந்தனர்.

இந்த தனித்துமிக்க நிகழ்வானது பயிற்சி, உத்வேகம், பொழுது போக்கு மற்றும் விருதுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்திருந்தது.

இந்த மாநாடானது AIA குழுமத்தினுள் மிகவும் மதிக்கப்படும் வருடாந்தக் கூட்டங்களில் ஒன்றாகத் திகழ்வதுடன் அதன் பங்கேற்பாளர்களின் உயர் தரங்கள் மற்றும் சாதனைகளையும் பிரதிபலிக்கின்றது.

இந்த வருடம் பிரான்சில் இடம்பெற்ற மாநாடானது தொழில்சார் வளர்ச்சி மற்றும் அங்கீகாரத்துடன் உலகின் மிகவும் பரபரப்பான நகரம் ஒன்றின் துடிப்பான ஆற்றலை ஒருங்கிணைத்து ஒரு செழுமையான அனுபவத்தினையே இதில் கலந்து சிறப்பித்தவர்களுக்கு வழங்கியிருந்தது.

12 மிகச்சிறந்த வெல்த் பிளானர்கள் மற்றும் வெல்த் பிளானர்களின் முகாமையாளர்களை உள்ளடக்கிய இலங்கையின் தொழில் வல்லுநர்கள் குழு இந்த நிகழ்வில் தனித்துவமாகக் காட்சியளித்திருந்ததுடன், இதில் சஞ்சீவனி சோமரத்ன, கே.பிரன், பி.ஏ.ருவினி சதுரங்கிகா, டபிள்யூ.ஏ. ஒசாகா, அஜித் பெர்னாண்டோ, யசோதா ரூபசிங்க, ரசிக சந்தகெலும், கே. காமினி, கிரிஷான் தசநாயக்க, எஸ்.எஸ்.பிரியந்த டயஸ், வினோல் பிரியசேனரத் மற்றும் இந்துனில் குமாரி ஆகியோர் மதிப்பிற்குரிய பிரதிநிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களுடன் AIA ஸ்ரீலங்காவின் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர, பிரதிப் பிரதான நிறைவேற்று அதிகாரி உபுல் விஜேசிங்க மற்றும் பிரதம முகவர் நிறுவன அதிகாரி சானக லியனகே ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.







# யூனியன் அஷ்யூரன்ஸ், நீரிழிவு சம்மேளனம் மூலோபாய பங்காண்மையில் கைச்சாத்து

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் (DASL) மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது.

அதனூடாக, நாட்டில் தற்போது நிலவும் உயர்ந்த நீரிழிவு நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளன.

சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் பிரகாரம், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை அதிகளவு நீரிழிவு நிலை காணப்படும் இடர்நிலையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய சுகாதார இடர்நிலையை புரிந்து கொண்டு, நீரிழிவை கட்டுப்படுத்துவது தொடர்பில் நாடு முழுவதிலும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனிநபர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான சாதனங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்பு வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் முன்வந்துள்ளது.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் யூனியன் அஷ்யூரன்ஸ் கைகோர்த்து, நிலைபேறான தீர்வுகளை எய்தும் வகையில், இலக்கு வைக்கப்பட்ட ஆதார அடிப்படையிலான தவிர்ப்பு மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தி, நீரிழிவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைப்பதிலும், அனைத்து இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.

பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் அங்கத்துவம் பெற்ற அமைப்பாக இலங்கை நீரிழிவு சம்மேளனம் திகழ்வதுடன், 1992 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்ட இல. 1 இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமாகவும் திகழ்கின்றது. ராஜகிரிய, தேசிய நீரிழிவு நிலையத்தில் இலங்கை நீரிழிவு சம்மேளனம் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ளது.

தனது மேம்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளினூடாக சிகிச்சை சார் மற்றும் தவிர்ப்பு சேவைகளை வழங்குவதுடன், வகை 1 நீரிழிவுடன் வாழும் பொருளாதார ரீதியில் சவால்களை எதிர்நோக்கியுள்ள இளைஞர்களுக்கு ஆதரவையும் வழங்குகின்றது.

மேலும், நீரிழிவுக்கு முன்னரான நிலை மற்றும் நீரிழிவு நிலை ஆகியவற்றை தணிப்பதற்கான ஆய்வுகளை முன்னெடுப்பதுடன், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக இந்தப் பங்காண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது பெறுமதிகளுடன் மிகவும் பொருந்திய அமைப்பான, இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த நாம் செயலாற்றுகின்றோம். தனிநபர் நலனை மேம்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு செயற்பாடுகளினூடாக, எமது தேசத்தின் திரண்ட முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இதை நோக்காகக் கொண்டும், இந்த நிலையினால் எதிர்கொள்ள நேரிடும் பல சவால்களை கவனத்தில் கொண்டும், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் ஏற்படுத்தியுள்ள கைகோர்ப்பினூடாக, பொது மக்களுக்கு ஆதரவளிக்கும் பரிபூரண தீர்வுகளை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். எமது அர்ப்பணிப்பு என்பது நீண்ட கால அடிப்படையிலானது. இலங்கை முழுவதிலும் பொது சுகாதார மேம்பாடு மற்றும் நலனை மேம்படுத்தல் போன்றவற்றில் நீடித்து நிலைத்திருக்கும் பங்களிப்பை வழங்குவதை அடிப்படையாக கொண்டுள்ளது." –என்றார்.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் பணிப்பாளரும் செயலாளருமான வைத்தியர். மஹேஹன் விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

"நீரிழிவை தவிர்த்தல் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இணைந்து செயலாற்ற முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். ஒவ்வொரு குடிமகனின் நலனை மேம்படுத்துவதிலும் அவர்களின் பங்களிப்பில் நாமும் இணைந்துள்ளோம்.

நீரிழிவு நிலையை குணமாக்க முடியாது. இலங்கை நீரிழிவு சம்மேளனம் மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் ஆகியன இணைந்து தமது வளங்களைப் பயன்படுத்தி, பொது மக்கள் மத்தியில் மேம்படுத்திய அறிவூட்டல், விழிப்பூட்டல் மற்றும் இனங்காணல் செயற்பாடுகளை வினைத்திறனான முறையிலும் நிலைபேறான முறையிலும் முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என்பதுடன், நீரிழிவுக்கு முன்னரான நிலையை ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளினூடாக மாத்திரமே மாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்." – என்றார்.






# மக்கள் வங்கி தொழில்முயற்சியாண்மை கிராமம் போட்டியின் வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டனர்

மக்கள் வங்கி தொழில்முயற்சியாண்மை கிராமப் போட்டி – 2023 இன் வெற்றியாளர்களுக்கான விருதுகளை வழங்கும் நிகழ்வு அதன் பிரதம நிறைவேற்று அதிகாரிஃ பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா தலைமையின் கீழ் கொழும்பு 05 இலுள்ள மக்கள் வங்கி ஊழியர் பயிற்சிக் கல்லூரியின் கேட்போட்கூடத்தில் இடம்பெற்றது.

அந்த வகையில், திக்வெல்ல, கடுகண்ணாவை, வரக்காபொலை, வலஸ்கல, நாவுல, ஹொறவப்பொத்தானை, சியம்பலாண்டுவ, வெள்ளவாய, பருத்தித்துறை மற்றும் கலேவல மக்கள் வங்கிக் கிளைகளுக்கு மிகச் சிறந்த தொழில்முயற்சியாண்மைக் கிராமங்களை ஸ்தாபித்தமைக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

தொழில்மயற்சியாண்மைக் கிராமங்கள் என்ற எண்ணக்கருவானது 2023 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வங்கியால் வழங்கப்படுகின்ற நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத சேவைகள் மூலமாக கிராமப்புற மக்கள் மத்தியில் நிதியியல் அறிவை மேம்படுத்தி, வங்கிக்கட்டமைப்பினுள் அவர்களை உள்வாங்கி, சலுகை அடிப்படையில் அவர்களுக்கு கடனுதவியளிப்பதே பிரதான நோக்கமாக காணப்படுகின்றது.

இந்தச் சிறிய குழுக்களுக்கு வங்கியால் வழங்கப்படுகின்ற நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத சேவைகள் மூலமாக அவர்களுடைய தொழில்முயற்சியாண்மையை வலுப்படுத்தி, அவர்களுடைய தயாரிப்புக்களை ஏற்றுமதித்தரத்திற்கு கொண்டுசெல்வதே இதன் முடிவான நோக்கம்.

மக்கள் வங்கியின் அபிவிருத்தி மற்றும் நுண்கடன் பிரிவானது மேற்குறிப்பிட்ட இலக்குகளை சிறப்பாக அடையப்பெறுவதற்காக, உள்நாட்டு மட்டத்தில் சிறு சிறு குழுக்களுடன், தொழில்முயற்சியாண்மைக் கிராமப் போட்டி 2023 என்பதை ஆரம்பித்தது. மக்கள் வங்கியின் 48 தொழில்முயற்சியாண்மைக் கிராமங்கள் மத்தியில், 26 கிராமங்கள் இதற்கு தகுதி பெற்றதுடன், அவற்றிலிருந்து மிகச் சிறந்த 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்முயற்சி வங்கிச்சேவை) விக்ரம நாராயண, பிரதிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்) நளின் பத்திரணகே, பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) மஞ்சுள திசாநாயக்க, சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், பிராந்திய முகாமையாளர்கள், பிராந்திய கடன் பிரிவுகளின் சிரேஷ்ட முகாமையாளர்கள், பிராந்திய கடன் அலுவலர்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான வங்கி ஊழியர்கள் பங்குபற்றினர்.










# ஏற்றுமதி வட்டத்தினூடாக சிறிய, நடுத்தர ஏற்றுமதித் துறைசார் தொழில்முனைவோரைப் பலப்படுத்துகிறது இலங்கை வங்கி

இலங்கை வங்கி நாடு முழுவதுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை சார்ந்த ஏற்றுமதியாளர்களைப் பலப்படுத்தும் முகமாக எதிர்காலத்தில் ஏற்றுமதித்துறையில் சிறந்து விளங்கக் கூடிய மற்றும் ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டுவரும் இளம் தொழில் முனைவோர் தமது தொழிற்தேர்ச்சிகளை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை வணிகக் கழகத்துடன் இணைந்து மாகாண ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

பொருளாதார நெருக்கடிமிக்க காலங்களில் ஏற்றுமதிசார் தொழிற்துறையினருக்கு கரங்கொடுக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியின் "ஏற்றுமதி வட்டம்" என்ற பிரிவின்கீழ் இம்முன்னெடுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

தேசத்தின் வங்கியாளர் என்ற வகையில் இலங்கை வங்கி சிறியளவிலான ஏற்றுமதியாளர்களையும் வளர்ந்து வரும் ஏற்றுமதியாளர்களையும் ஏற்றுமதித்துறை ஜாம்பவான்களாக மாற்றும் பொருட்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தைக் கையிலெடுத்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவில், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறைசார் தொழில் முயற்சியாளர்கள் தமது பலவீனங்களை அடையாளங் கண்டு பலங்களைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஏற்றுமதித் துறைப் பயணத்தை ஆரம்பித்து சர்வதேச சந்தைக்குள் காலடி எடுத்து வைக்கும் வகையில் பரந்தகன்ற ஏற்றுமதி உத்திகளை வகுத்துக்கொள்ளக்கூடியவர்களாக மாறுவர்.

நாடுமுழுவதும் பரவலாக நடாத்தப்படும் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே மத்திய மாகாணத்தின் கண்டி, தென்மாகாணத்தின் மாத்தறை, சப்ரகமுவ மாகாணத்தின் குருவிட்ட, ஊவா மாகாணத்தின் பதுளை முதலான இடங்களில் நான்கு ஏற்றுமதி மாநாடுகளை 2024.07.06 ஆம் திகதி நடாத்தியுள்ளது.

ஊவா மாகாணத்தில் 50 ஏற்றுமதி வாடிக்கையாளர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றதுடன் இத்தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இதுவரை 250 ஏற்றுமதி வாடிக்கையாளர்களுக்கு மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். அத்துடன் நாட்டின் சகல மாகாணங்களில் இருந்தும் 600 இற்கு மேற்பட்ட ஏற்றுமதித்துறைசார் தொழில்முயற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

பல்வேறு விடயப் பரப்புகளிலும் நடாத்தப்பட்ட மேற்படி நிகழ்ச்சித்திட்டமானது சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை மாற்றத்தையும் சந்தை அணுகல் மாதிரியையும் பயன்படுத்தியுள்ள நம் நாட்டு தொழில்முயற்சியாளர்களது கதைகளையும் உண்மையான உதாரணங்களையும் உள்ளடக்கி ஓர் பயிற்சிப்பட்டறை வடிவில் நடாத்தப்படவுள்ளது.

இலங்கை வணிகக் கழகமானது தம்மால் உருவாக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை மாற்றம் மற்றும் சந்தை அணுகல் மாதிரி என்பவற்றின் ஊடாகப் பல சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை ஏற்றுமதிசார் நிறுவனங்களாக மாற்றியுள்ளது.

மேலும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில்முனைவோரின் வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் முயற்சியாளர்களுக்கு வழங்குவதனூடாக அவர்களுக்கு நம்பிக்கையையும் பலத்தையும் ஊட்டுவதனை இலக்காகக் கொண்டுள்ளன.

இத்தொடர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த சிறிய மற்றும் நடுத்தர வியாபார மாற்றத் துறையில் பாண்டித்தியம் மிக்க ஒருவரை இலங்கை வங்கி ஈடுபடுத்தி வருகிறது.

இலங்கை வங்கி மற்றும் இலங்கை வணிகக் கழகம் என்பவற்றின் இக்கூட்டுமுயற்சி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஆதரித்தல் மற்றும் வியாபாரத்துறையில் ஏற்றுமதி மூலோபாயங்களை ஊக்குவித்தல் என்பவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சிகளையும் வளங்களையும் வழங்குவதனூடாக இலங்கை வங்கியானது அனைவரையும் உள்ளடக்கியதும் பல்வகைத்தன்மை கொண்டதுமான வியாபாரச் சூழலை இலங்கையில் உருவாக்க உதவுகின்றது.

இலங்கை வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிப்தோடு மட்டுமல்லாமல் நாட்டின் ஒட்டமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்றது. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றும் ஏற்றுமதியாளர்கள் இலங்கை வங்கியின் ஏற்றுமதி வட்டத்திலும் இணைந்துகொண்டு தம் பயணம் முழுவதும் பல்வேறுபட்ட நிதிசார் மற்றும் நிதிசாரா சேவைகளை அனுபவித்திட முடியும்.

இலங்கை வங்கி மற்றும் இலங்கை வணிகக் கழகத்தின் இக்கூட்டுச் செயற்பாடு எதிர்கால ஏற்றுமதியாளர்களையும் ஏற்கனவே ஏற்றுமதித்துறையில் ஈடுபட்டுவரும் முயற்சியாளர்களையும் ஊக்குவித்து நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியினை உறுதிப்படுத்தும் வங்கியின் அர்ப்பணிப்புக்குச் சாட்சியமாகும். இவ்வாறான முன்னெடுப்புகள் ஊடாக இலங்கை வங்கியானது நாட்டின் அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் வளமான பாதையை வகுத்துள்ளது.